## இயல் 6.7 - அளவைகள்

பயிற்சி எண் :: 6.7.1.2.B

அளவைகள் - வெவ்வேறு அலகுகள் அடங்கிய பயிற்சி II

### அளவைகள் - வெவ்வேறு அலகுகள் அடங்கிய பயிற்சி II

இளமாறன், அன்பு, நிலவன் மற்றும் புகழேந்தி ஆகிய நால்வரும் நண்பர்கள். அவர்கள் படிக்கும் அரசுப்பள்ளி, அவர்களின் வீட்டிலிருந்து முறையே 1 கி.மீ 800 மீட்டர், 2 கி.மீ 300 மீட்டர், 1 கி.மீ 650 மீட்டர் மற்றும் 2 கி.மீ 750 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. என்றால், அவர்கள் எல்லோரும் தினமும் பள்ளிக்குச்சென்றுவர ஆகும் மொத்த தூரம் எவ்வளவு?

| வரிசை எண் | அவர்கள் படிக்கும் பள்ளிக்கு உள்ள தூரம் | கி.மீ | மீ |
|---|---|---|---|
| 1 | இளமாறனின் வீட்டிலிருந்து | 1 | 800 |
| 2 | அன்புவின் வீட்டிலிருந்து | 2 | 300 |
| 3 | நிலவனின் வீட்டிலிருந்து | 1 | 650 |
| 4 | புகழேந்தியின் வீட்டிலிருந்து | 2 | 750 |
| 5 | **4 நண்பர்களின் வீட்டிலிருந்து அவர்கள் படிக்கும் பள்ளி உள்ள தூரங்களின் கூடுதல்** | **8** | **500** |

(கி.மீ நிரலில் மேலே சிவப்பு நிறத்தில் "2" — மீ நிரலிலிருந்து அம்புக்குறியுடன்)

நண்பர்களின் வீட்டிலிருந்து அவர்கள் படிக்கும் பள்ளிக்கு உள்ள தூரத்தின் கூட்டுத்தொகை $\sum_{i=1}^{4} d_i = 8$ கி.மீ 500 மீ ஆகும். அவர்கள் பள்ளிக்கு காலையில் சென்று மாலையில் திரும்பிவர இதன் இரட்டிப்பு தூரம் ஆகும். எனவே, அவர்கள் எல்லோரும் தினமும் பள்ளிக்குச்சென்றுவர ஆகும் மொத்த தூரம் **17 கி.மீ** ஆகும்.

**Information, Rights & Disclaimers** :: Sum & solution prepared on Saturday 27th November, 2021 :: 05:15 Hrs. All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Read :: 4/16/2020 dt. January 31, 2020. https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**